1978 மார்ச் 18]

நகராட்சிப் பகுதிகளில் நவீன கழிப்பிடங்கள்.

*வினா 613—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளில் நவீன கக்கூஸ்களை கட்டாயமாக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

திரு. ரா. கிருஷ்ணன் : நகரங்களிலும், மாநகரங்களிலும் இப்படிப்பட்ட நவீனமுறையில் கக்கூஸ்களைக் கட்ட கட்டாயப் படுத்துவதன் மூலம் மலத்தைத் தலையில் சுமக்கிற ஒரு கொடுமை யான பணியிலிருந்து அதில் ஈடுபட்டிருப்பவர்களைத் தடுக்கமுடி யும். ஆகவே நவீன முறையில் கக்கூஸ்கள் அமைக்க, வீடுகளில் அப்படிப்பட்ட கக்கூஸ்கள் அமைக்க அரசு கடன் கொடுக்க முன்வருமா?

அதேபோல் குடிசைவாழ் மக்கள் உபயோகப்படுத்துகிற பொது வான கக்கூஸ்களுக்கு தாராளமாகத் தண்ணீர் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவ்வாறு அமைக்கப் படுகிற கழிப்பிடங்களுக்கு அதிகமான பணச் செலவு இல்லாமல் ஏறத்தாழ ரூ. 100 செலவில் அமைக்கிற வகையில் பூந்தமல்லி ஆராய்ச்சிக் கூடம் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது. அதைத்தான் செயல்படுத்த வேண்டும் என்று அரசாங்கமும் கருதுகிறது. ஆகவே, இதற்கு அரசு கடன் கொடுக்கிற உத்தேசமில்லை.

குடிசைவாழ் மக்கள் நிலைபற்றிச் சொன்னார்கள். அதுபற்றி அரசாங்கம் தனியாகப் பரிசீலிக்கும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : ஊராட்சிகள், பேரூராட்சி கள், நகராட்சிகள் இவற்றிற்குப் போதுமான நிதி வசதி இல்லாத தன் காரணமாக சுகாதாரச் சீர்கேடுகள் அதிகமாக ஏற்படுகிறது. மில்கள் எல்லாம் சில நேரங்களில் மூடப்படுகிறபோது, ஸிக் மில்ஸ் என்று டிக்ளேர் செய்து அரசு எடுத்து நடத்துவதுபோல் குறிப் பிட்ட பஞ்சாயத்துக்களை அரசு எடுத்து சுகாதார இலாக்கா மூலம் பப்ளிக் கன்வீனியன்ஸ் ஏற்படுத்திக் கொடுத்து அவற்றின் சுகா தார நிலையைச் சீர்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது பற்றி சுகாதார இலாக்காதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : இப்படிப்பட்ட நவீன கக்கூஸ்கள் கட்டுவதற்காக என்று பல முனிசிபல் நகரங்களில் குறிப்பாக திருச்சியில் ரோடுகள் எல்லாம் வெட்டி பல ஆண்டுகளாக ஆகியும் அது செய்யப்படாத காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் பள்ளிக்குப் போக முடியவில்லை. ஆகவே, அந்த இடங்களில்—வெட்டப்பட்டு செய்யப்பட வேண்டுமென்று முடிவெடுத்த இடங்களில்—துரிதமாகச் செய்து முடிக்கப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு செய்யும்.

திரு. எஸ். ஆர். இராதா : நகராட்சிப் பகுதிகளில் புதை சாக்கடைத் திட்டம் உள்ள பகுதிகளில்கூட பலயிடங்களில் கக்கூஸ்களுக்கு இணைப்புத் தருவதில்லை. எனவே, அவற்றிற்கு உடனடியாக இணைப்புத்தர ஏற்பாடு செய்வதோடு நகராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த நவீன கக்கூஸ்களை அமைப்பதற்கு நகராட்சிகளுக்கு நிதி உதவி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கும்பகோணம் நகராட்சியை வைத்துக் கொண்டு எல்லா நகராட்சிகளையும் சொல்கிறார் என்று கருதுகிறேன். குறிப்பிட்டுச் சொன்னால் அது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டம் தயாரிக்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குறைந்த செலவில் நவீன கக்கூஸ் கட்டப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் பயன்பட்டு வருகிறது. இதை மாநில அளவில் முழுமையாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபற்றி நகராட்சி ஆய்வாளர் அவர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : சென்னையில் சில இடங்களில் பொது கழிவிடங்கள் மிகவும் சீர்கேடாக இருக்கின்றன. இந்த இடங்களை மாற்றி, அந்த இடங்களில் சமூகக் கூடங்களோ அல்லது நகராட்சி ஆஸ்பத்திரிகளோ கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது மாநகராட்சி மேற்கொள்ள வேண்டிய வேலை. இதற்குத் தனியாகக் கோள்வி போட வேண்டும்.

1978 மார்ச் 18]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் நகராட்சியில் பொதுவாக இருக்கக் கூடிய கக்கூஸ்கள் எல்லாம் மிகவும் சீரழிந்து இருக்கின்றன. இவைகளை எல்லாம் மராமத்து செய்து நல்ல கக்கூஸ்களாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய விவரங்களைத் தெரிவிக்கலாம்.

திரு. இ. தமிழரசன் : நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட நவீன கக்கூஸ்களை அமைக்க முடியாவிட்டாலும், எல்லா நகராட்சி பகுதிகளிலும் இருக்கின்ற பேருந்து நிலையங்களில் இருக்கின்ற கக்கூஸ்களையாவது நவீன முறையில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஒவ்வொன்றாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, விஞ்ஞானம் பரவி வருகின்ற இந்த நாளில் மனிதனின் மலத்தை மனிதனே சுமக்கக்கூடிய நிலை இன்னும் நகராட்சிகளில் இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்க புதிதாக நகராட்சிப் பகுதிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்கு வரைபடங்கள் அனுமதிக்காக வரும்போது, கட்டாயமாக நவீன முறையில் கக்கூஸ்கள் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இதில் சேர்க்க முடியுமா? அதே நேரத்தில் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதற்கேற்ற முறையில் நகராட்சிச் சட்டங்களைத் திருத்தம் செய்ய முடியுமா என்று அரசு முயற்சி செய்து வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பதை, சேலத்தை நினைவில் வைத்துக் கொண்டு கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்குத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

Warren Road in Madras

*Q. No. 614— Thiru. S. M. VASAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether land assigned for the construction of a road by the Madras Corporation has been appropriated by private parties at Warren Road, Mylapore, Madras;

(b) the steps taken to recover the land; and

(c) the steps taken to lay the road ?